தருமபுரி மாவட்டத்தில் பால் சேகரிப்புச் சங்கங்கள்

* வினா 98—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டத்தில் பால்வள வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள பால் சேகரிப்பு சங்கங்கள் எத்தனை?

(ஆ) இன்னும் எத்தனை சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) தர்மபுரி மாவட்டத்தில் தற்பொழுது 150 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) 31-3-1979 வரையிலான நடப்பு ஆண்டில், மேலும் 100 முதல் 150 வரை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, உருவாக்கப்பட்ட பல சங்கங்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதோடு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சீஃப் ப்ரொமோட்டர் என்ற பதவி ஏற்படுத்தப்படுமா, அந்த வகையில் தர்மபுரி மாவட்டத்திற்கும் நியமிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட 150 சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் 100 முதல் 150 சங்கங்களை 1979 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன்படி இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட இருக்கின்ற காரணத்தால் தாமதம் ஏற்படுவது என்பது அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. மேலும் இந்த சீஃப் ப்ரொமோட்டர்கள் அமைப்பது பற்றிய விஷயத்தை அரசு பரிசீலித்து வருகின்றது. பரிசீலித்த பின் விரைவிலே தர்மபுரி மாவட்டத்திலேயும் ஒரு சீஃப் ப்ரொமோட்டர் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்த வைத்தியம் பற்றிய சுவடிகள் முதலியன.

* வினா 99—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் சித்த மருத்துவம் பற்றிய கிடைப்பதற்கரிய கையெழுத்துப் பிரதிகளையும் ஓலைச் சுவடிகளையும் அச்சுப் பிரதிகளையும் சேகரிப்பதற்கென அரசு ஒரு குழுவை அமைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை அக்குழு கண்டுபிடித்தவைகளின் விபரம் என்ன ?